வாக்குமூலம்

குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் MCOP. No. 28/2024

வழக்கு சாட்சி – ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திருமதி. கண்ணகி | தொழில் | :: இல்லத்தரசி |
| க பெயர் | :: நாகராஜ் | வயது | :: 47/2026 |
| கிராமம் | :: முடிவீரன்பட்டிணம் | | |
| தாலுகா | :: திருவாடானை | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 16.04.2026.

**முதல் விசாரணை** (நேரம் : நண்பகல் 12.30 மணி)

நான் மனுதாரர் ஆவேன், என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்துகள் என்னுடையவைதான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1. பார்வை மகஜர் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2. மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3. 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4. 4ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.5. 4ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச்சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.6. 3ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.7. மதுரை, வேலம்மாள் மருத்துவமனை Discharge summary அசல் ம.சா.ஆ.8. என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.9. (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது). 4ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.10. என்னுடைய கணவரின் இறப்புச்சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ.11. (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது). 17.06.2023ம் தேதி நான் காவல் நிலையத்தில் கொடுத்த

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.04.16 16:47:38 +0530

புகார் வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.12. விபத்து பதிவேடு சான்றிட்ட நகல் ம.சா.ஆ.13. சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.14. குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.15. வேலம்மாள் மருத்துவமனை பில்கள் ம.சா.ஆ.16 வரிசை (64 எண்ணிக்கை). வேலம்மாள் மருத்துவமனை பார்மஸி பில்கள் ம.சா.ஆ.17 வரிசை (174 எண்ணிக்கை). எக்ஸ்-ரே ம.சா.ஆ.18 வரிசை (16 எண்ணிக்கை). நான் தற்போதுவரை வேலம்மாள் மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருவதற்கான சிகிச்சை குறிப்புகள் ம.சா.ஆ.19 வரிசை (5 பக்கங்கள்) (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது). நான் இராமநாதபுரம், ஆரோக்யா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதற்கான சிகிச்சை குறிப்புகள் ம.சா.ஆ.20 வரிசை (15 பக்கங்கள்) (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது). என்னுடைய ஊனச்சான்று நீ.ம.சா.ஆ.1. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை** :

சம்பவம் நடந்த ரோடு உத்திரகோசமங்கையிலிருந்து இராமநாதபுரம் வரும் ரோடு என்றால் சரிதான், சம்பவம் இரவு நேரம் நடந்தது. நான் ஆட்டோவிற்குள் இருந்ததால் ஆட்டோ எவ்வாறு சென்றது என்றால் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய தகவலின் படி தான் மனு தயார் செய்யப்பட்டது, மனுவில் சொல்லியுள்ள விபரங்கள் சரியானவை தான். எதிர்மனுதாரர்கள் 5 பேரும் சேர்ந்து தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அன்றைய தினம் நானும், என் உறவினர்களும் ஆட்டோ ஓட்டுநரை சேர்த்து 6 பேர் அந்த ஆட்டோவில் பயணம் செய்தோம். அந்த ஆட்டோவில் 3 பேருக்கு மேல் பயணம் செய்யக்கூடாது என்றால் சரிதான். அந்த ஆட்டோ ஓட்டுநருக்கு அந்த சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் தெரியாது. நாங்கள் உத்திரகோசமங்கைக்கு சென்றுவிட்டு வாராஹிஅம்மன் கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு திரும்பி இராமநாதபுரம் மெயின் ரோட்டுக்கு வரும்போது இரவு

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.04.16 16:47:44 +0530

சுமார் 08.00 மணியிருக்கும். உத்திரகோசமங்கையிலிருந்து புறப்பட்டு சுமார் 10 நிமிடத்தில் விபத்து நடந்தது. அந்த இடத்திற்கு பக்கத்தில் இரயில்வே கேட் உள்ளது என்றால் சரிதான். கார் எதிரே வந்தது. சம்பவ காலத்தில் அந்த சாலை சிறிய சாலை என்றால் சரிதான். காரின் முகப்பு விளக்கு பிரகாசமாக இருக்கும் என்றும், ஆட்டோவின் முகப்பு விளக்கு சுமாராக இருக்கும் என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டுநர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருட்டில் ஆட்டோவை ஓட்டி வந்து அதிகபாரத்துடன் ஓட்டி வந்து கார் மீது மோதி அவர் தான் விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. ஆட்டோ ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் இந்த வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்பதற்காக கார் ஓட்டுநர் மீது புகார் கொடுத்து குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் இந்த விபத்திற்கு பின்பு தான் இறந்துபோனார். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்தேன். 1 சென்ட்க்கு எத்தனை சதுர அடி என்று எனக்கு தெரியாது. 1 ஹெக்டேருக்கு எத்தனை ஏக்கர் என்று எனக்கு தெரியாது. நான் ரியல் எஸ்டேட் தொழிலுக்கு பெயர் எதுவும் வைக்காமல் வீட்டிலிருந்து தான் ரியல் எஸ்டேட் தொழில் செய்தேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் எதுவும் செய்ததில்லை என்றும், வருமானத்தை அதிகமாக காட்டி அதிக இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக அவ்வாறு ரியல் எஸ்டேட் தொழில் செய்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய காயங்கள் சரியாகிவிட்டது என்று தான் வேலம்மாள் மருத்துவமனையிலிருந்து என்னை Discharge செய்தார்கள் என்றால் சரிதான். எனக்கு இருதய நோய் இருப்பதாகவும், அது இந்த விபத்தினால் ஏற்பட்டதாகவும் கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. ஆரோக்யா மருத்துவமனையில் சுமார் 5 ஆண்டுகளாக சிகிச்சை பெற்று வருகிறேன். எனக்கு பூரண குணமடைந்துவிட்டது என்றும் இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக நிரூபண வாக்குமூலம் பாரா 3 முதல் 5–ல் மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. அவற்றிற்கான

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.04.16 16:47:50 +0530

ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பில்கள் மற்றும் Discharge Summary ஆகியவை வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு South Indian வங்கியில் வங்கி கணக்கு உள்ளது. விபத்திற்காக கருணை அடிப்படையில் எனக்கு 1ம் எதிர்மனுதாரர் ரூ.50,000/– வங்கி மூலமாக செலுத்தி பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த விபரத்தை மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு நான் பயணம் செய்த ஆட்டோவின் ஓட்டுநர் தான் முழு காரணம் என்றும், அவருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி 1ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்ய ஏற்பாடு செய்து அதன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு 1ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதை எதிர்த்து அவர் உரிய அதிகாரிகளுக்கு மனுக்கள் செய்துள்ளார் என்றும், அந்த மனுக்கள் தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றும் சொன்னால் எனக்கு தெரியாது. நான் பரிபூரணமாக குணமடைந்துவிட்டேன் என்றும், நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது என்றும் சொன்னால் சரியல்ல. விபத்திற்கு ஆட்டோ ஓட்டுநர் தான் காரணம் என்றும் அதனால் 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மட்டுமே எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

**5ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

விபத்து சமயம் நான் பயணம் செய்த ஆட்டோவின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அவருடைய ஓட்டுநர் உரிமம் 28.08.2018ம் தேதியில் காலவதியாகிவிட்டது என்றும் ம.சா.ஆ.7 ஆவணத்தின்படி துலங்குகிறது என்றால் எனக்கு தெரியாது. கார் ஓட்டுநர் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்று அவர் மீது தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

J JEYA SUTHAHAR Digitally signed by J JEYA SUTHAHAR Date: 2026.04.16 16:47:56 +0530

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் ஆட்டோ ஓட்டுநர் மற்றும் கார் ஓட்டுநர் ஆகிய இருவர் மீதும் தவறு உள்ளது. 5ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்த ஆட்டோவை ஓட்டிச்சென்ற ஓட்டுநருக்கு விபத்து சமயம் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அதனால் 5ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. அனுமதிக்கப்பட்ட பயணிகளை விட அதிகமான பயணிகளுடன் ஆட்டோவை ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளதாலும், 5ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை மிகவும் அதிகப்படியானது என்றால் சரியல்ல.

(Negligence பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.)

**மறு விசாரணை – இல்லை .**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.04.16 16:48:03 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.